ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2180/18 - 2020 ජූනි මස 16 වැනි අඟහරුවාදා - 2020.06.16

*2180/18 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்***

*25(3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

இத்தால் பின்வருமாறு அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது :-

(அ) இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு ஓகத்து மாதம் 05 ஆந் திகதியன்று நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் 6 ஆம் இலக்க நுவரெலியா தேர்தல் மாவட்டத்துக்கு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுண கட்சியினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளராகவிருந்த திரு. ஆறுமுகன் தொண்டமான் என்பவரின் இறப்பு 2020, மே மாதம் 26 ஆந் திகதியன்று ஏற்பட்டது.

(ஆ) அத்தகைய இறப்பு எவ்வாறிருப்பினும், சொல்லப்பட்ட திரு. ஆறுமுகன் தொண்டமான் என்பவரின் பெயரை விட்டுவிட்டு, 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுண கட்சியினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவரான திரு. ஜீவன் தொண்டமான் என்பவரை உள்ளடக்குவதாக, அந்தத் தேர்தல் மாவட்டத்திற்கென ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுண கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்ட பெயர் நியமனப் பத்திரமானது, செல்லுபடியுடையதாகும் என்பதுடன், அத்தகைய தேர்தல் மாவட்டத்திற்கான வாக்கெடுப்பு மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 24 ஆம் பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறு 2020, ஓகத்து மாதம் 05 ஆந் திகதியன்று நடைபெறுதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| மஹிந்த தேசப்பிரிய, | என். ஜே. அபேசேகர, | எஸ். இரத்னஜீவன் எச். ஹூல், |
| தவிசாளர், | அங்கத்தவர், | அங்கத்தவர், |
| தேர்தல் ஆணைக்குழு. | தேர்தல் ஆணைக்குழு. | தேர்தல் ஆணைக்குழு. |

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2020, யூன் 16.